# யாழ்.நகரில் நடந்த இரவு நேரத்தாக்குதல்

யாழ்நகர்மீதுநேற்றுமுன்தினமிரவுமேற்கொள்ளப்பட்ட பல மணி நேரஹெலித்தாக்குதலினாலும், விமானத்தாக்குதலினாலும் யாழ். போதனா வைத்தியசாலை உட்பட நூற்றுக் கணக்கான கடைகளும் வீடுகளும் சேதமடைந்துள்ளன. 'அவ்ரோ' விமானத்திலிருந்து மின்சாரநிலைய வீதிப்பகுதிக்கு இரு குண்டுகள் வீசப்பட்டுள்ளன. ஒரு குண்டு பெட்டா, ஜெமினி போட்டோ கடைகளில் விழுந்து வெடித்ததினால் ஆறு கடைகள் தரைமட்டமாகின. அத்துடன் போதனா வைத்திய சாலையின் 17ம், 18ம் வாட்டுகள் முற்றாக சேதமடைந்தன. மற்றைய சில வாட்டுகள் சிறு சேதத்திற்குள்ளாகின. மற்றைய குண்டு எஸ். பி. சாமி அன் கோ கடைப்பகுதியில் விழுந்து வெடித்ததில் ஒட்டுக் கடை உட்பட இருபது கடைகள் முற்றாகப்பாதிப்புக்குள்ளாகின. ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதிச்சந்தியில் வெடித்த குண்டினால் இலங்கை வங்கி, காப்புறுதிக் கூட்டுத்தாபனம், தாதியர் — 4ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-00

முரசொலி

முரசு 04 ஒலி 175 செவ்வாய் 07-08-1990 (ஆடி 22) முஹர்ரம் 15

● சுயமரியாதை காக்க தன் ஜீவன் அர்ப்பணிக்கும்

# போராளிகள் தமிழீழத்தின் அணையாத தீபங்களே!

## அஞ்சலிக் கூட்டத்தில் யோகி

"தமிழீழ மண்ணின் மீட்புக்காகவும், சுயமரியாதைக்காகவும் தம் இன்னுயிரையும் தியாகம் புரியும் தீரர்கள் இருக்கும்வரை விடுதலை வேட்கை தணியப் போவதில்லை. அது அணையா தீபமாகச் சுடர் விட்டுக் கொண்டே இருக்கும்'' என்று நேற்று மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நிகழ்ந்த மரணித்த வீரர்களின் நினைவான அஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் - யோகி சொன்னார்.



யாழ். கோட்டைப் பகுதியில் நிகழ்ந்த மோதலின் போது தம்முயிர் ஈந்திட்ட 28 விடுதலைப் புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக்கூட்டம் திரு. ஆஞ்சநேயர் தலைமையில் இடம் பெற்றது,

இக் கூட்டத்தில் புலிகளின் முக்கிஸ்தர்களில் ஒருவரான திரு. தேவர் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி. சுந்தரி ஆகியோரும் உரையாற்றினர் (03-ஸ்ரீ)

## வீரமரியாதையுடன் பூதவுடல்கள் தகனம்

கோட்டை இராணுவ முகாம் மோதலில் மரணித்த வீரர்களின் பூதவுடல்கள் நேற்று மாலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மானிப்பாய் சிப்பிலி மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டன.

மானிப்பாய் இந்துக் கல்லூ ... 4 ஆம் பக்கம் பார்க்க

## முகிலைக் கிழித்து வந்து நேற்றும் இரவுத் தாக்குதல்

பொம்மர் தாக்குதலின் வேகம் நேற்று இரவு வரையும் நீடிக்கத்தான் செய்தது. சிவப்பு, நீலவர்ணங்களுடனான சமிக்கை விளக்குகளுடன் முகிலைக் கிழித்துக் கொண்டு சென்ற இந்த பொம்மர் குண்டு வீசி வழமையான தாக்குதலை நடத்தி அகன்றது. விழி பிதுங்கிய நிலையில் — 04 ஆம் பக்கம் பார்க்க

## பாகிஸ்தான் தலையீடு பற்றி...

ஸ்ரீலங்கா இனப்பிரச்சினையில் பாகிஸ்தான் தலையீடு செய்வதாக முன்னாள் பிரதமரும், இந்திராகாங்கிரஸ் தலைவருமான திரு.ராஜீவ் காந்தி சமீபத்தில் குற்றம் சுமத்தியிருந்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன் கிழக்கு மாகாணத்தில் —4ஆம் பக்கம் பார்க்க

புல்லுமலையில் சம்பவம்

## சிப்பாயின் கால் துண்டிப்பு ஆவேசத்தில் தீவைப்பு

மட்டக்களப்பிலுள்ள புல்லுமலை முகாமில் இருந்து கடந்த சனியன்று பொங்கல வீதியால் வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கிளைமர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் இராணுவத்தினர் தரப்பில் பலத்த — 04 ஆம் பக்கம் பார்க்க

## கொக்குவில் முருகனாலயமும் நேற்றையநிகழ்வில் சேதம்

நேற்றுப் பிற்பகல் பொம்மர் தாக்குதல் கொக்குவிலில் நிகழ்ந்தது. சந்தியில் உள்ள முருகன் கோவில் அருகே அடுத்தடுத்து வீசப்பட்ட 4 குண்டுகளினால் முருகன் ஆலயம் சிறிது சேதமடைந்தது. ஒரு வயோதிபருக்குக் கழுத்தில் சிறுகாயம் —04ஆம் பக்கம் பார்க்க

## துணுக்காயிலும் துன்பம்

நேற்றுக் காலை துணுக்காய்ப் பகுதியில் ஸ்ரீலங்கா விமானப்படையினர் பெரும் குண்டு வீச்சை நிகழ்த்தினர்.

காலை 8.45 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதவில் ஜி. பி. எஸ். கட்டிடம் முற்றாகச் சேதமடைந்தது. அத்துடன் மேலும் பல கட்டிடங் —4 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் கடும் தாக்கு

நேற்று முன்தினம் மாலை ஐந்து மணியளவில் கிரான்துறை முகாமிற்கு அண்மையில் உள்ள காவல் அரண்மீது புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அதே தினம் அம் முகாமில் இருந்து நீர் அள்ளச் சென்ற இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் திடீர்த் தாக் —4ஆம் பக்கம் பார்க்க

பிரதமர் வி. பி. சிங் அறிவிப்பு

## ஸ்ரீலங்கா விடயத்தில் கூர்மை விழிப்பு அவசியமாகிறது

''ஸ்ரீலங்கா நிலைமையில் மிகக்கூர்மையாகவும் விழிப்புடனும் இருக்க வேண்டியுள்ளது'' என்று இந்தியப் பிரதமர் திரு. விஸ்வநாத்பிரதாப் சிங் கூறியுள்ளார்.

நேற்றுப் புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற் — 4 ஆம் பக்கம் பார்க்க

## கோட்டைப் பகுதியில் புலிகளின் தற்கொலைப் படை

யாழ். கோட்டையைத் தொடர்ந்து தாக்குவதற்கும் அங்குள்ள ராணுவச்சிப்பாய்களைச் சரணடையுமாறு கோருவதற்குமே விடுதலைப் புலிகள்கோட்டை யாழ். போதனா வைத்தியசாலைப்பகுதியை யுத்தத் தவிர்ப்பு வலயமாக ஏற்றுக் கொள்ள மறுத்து வருவற்கான காரணம் என ஸ்ரீலங்கா — 4ம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

நேற்று முன்தினம் காலை கிளிநொச்சி பழைய ராணுவ முகாமிலிருந்த பொறி வெடிகளை விடுதலைப் புலிகள் அகற்றிய போது தற்செயலாக வெடித்ததில் பாலன் (உமையாள்புரம்) என்ற போராளி வீரமரணமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (03 ஸ்ரீ)

## கொம்மாந்துறையில்..

கொம்மாந்துறை முகாமில் இருந்து கடந்த வெள்ளியன்று எட்டு இராணுவத்தினர் சிவில் உடையில் வெளி வந்த போது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது. (3-ஸ்ரீ)

## கோரிக்கை

அனைத்துப் பாடசாலைகளையும் சேர்ந்த விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் உறுப்பினர்களையும் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு தவறாது சமுகம் அளிக்கும்படி கோரப்படுகின்றார்கள். ஸ்ரீ

## கொக்குவில் சந்தி குண்டுத்தாக்குதல்

நேற்று மாலை கொக்குவில் சந்தியில் பொம்மர் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதில் மூவர் காயமடைந்தனர்-

திடிரென மேற் கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் பொது மக்கள் சிதறியோடினார்கள். (03)

## கொடும்பாவியும் ஹெலியும்

நேற்று முன்தினம் மாலை இணுவிலில் ''ஹெலி'' சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தது.

அந்த நேரம் அவ்வழியாலே வந்த இரு வாகனங்களைத் துரத்தியே அது வேட்டுக்களைத் தீர்த்தது.

சம்பவ நேரத்தில் கொடும்பாவி ஒன்றினை இழுத்து வந்த இளைஞர் கோஷ்டி ஹெலி சென்ற பிறகு தொடர்ந்து நடத்தினர். (ப. 10-ஸ்ரீ)

## நேற்று முன்தினம் இடம்பெற்ற தொடர்த் தாக்குதலினால்
# ஆயர் இல்லம் மீண்டும் சேதம்;
# அகதி முகாமில் அறுவர் பலி

நேற்றுமுன்தினம்அதிகாலை விமானங்களினால் யாழ்நகர் மீதுமேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான குண்டு வீச்சுத்தாக்குதலில் யாழ். ஆயர் இல்லம் மீண்டும் சேதத்திற்குள்ளாகியது.

ஆயர் இல்ல வளவினுள் விழுந்த பாரிய குண்டினால் அவ் இல்லத்தின் வடக்கில் அமைந்துள்ள பிறதர்ஸ்ஹவுஸ் விடுதிஉட்படபல கட்டிடங்கள் பெருமளவு சேதத்திற்குள்ளாகின.

குருமார்கள் பாதுகாப்பான இடங்களில் இருந்ததால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன. கடந்த 30-ம் திகதித் தாக்குதலிலும் யாழ். ஆயர் இல்லம் சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் இக்குண்டினால் பிறஸ்லேன், பிறஸ்றோட் ஆகியபகுதிகளில் உள்ள பல வீடுகளும் சேதமடைந்தன. அத்துடன் யாழ் பெரிய கோயிலுக்கும் சிறிது சேதம் ஏற்பட்டது.

இதே வேளை நேற்று முன்தினம் ஒன்பது மணியளவில் பொம்மர் விமானங்கள் இரு அகதி முகாங்கள் மீது குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன இத்தாக்குதலில் ஆறு அகதிகள் ஸ்தலத்திலேயே பலியாகியதோடு பலர் படுகாயத்திற்குள்ளானார்கள்.

பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலத்தில் அகதிகளாகத் தங்கியிருந்த சுமார் 300 அகதிகளுக்கு காலை உணவு தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் விமானத்தால் திடீரென குண்டு வீசப்பட்டது.

இத்தாக்குதலில் மூன்று குழந்தைகள் உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டதுடன் பன்னிரண்டு பேர்வரை படுகாயமடைந்தனர். காயமடைந்தோர் மானிப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்

கொல்லப்பட்டவர்களில் திருமதி கி. அருளம்மா (45) இவரது மகள் மேரி விஜிதா (10), ஜேம்ஸ் நிக்ஸன் (8) ஜே. வனிதாமதி (10) சுபா, கினி(8) ஆகியோரும் அடங்குகின்றனர். அகதிமுகாம் கட்டிடங்கள் சேதமடைந்ததுடன் பல அகதிகள் சிறு காயத்திற்குள்ளானார்கள்.

இத்தாக்குதலின் தொடராக மீண்டும் விமானங்கள் கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலய அகதி முகாம் மீதும் இரு குண்டுகள் வீசின.

எனினும்இங்கு தங்கியிருந்த 40 குடும்பங்கள் பதுங்குகுழியினுள்ளும் பாதுகாப்பான இடங்களிலும் ஒதுங்கியதால் உயிர்தப்பினர். இத்தாக்குதலில் பாடசாலையின் இரு கட்டிடங்கள் சேதத்திற்குள்ளாகின. 66-03-16-71கி)

## ஆடிவேல் நேற்று ஆரம்பம்; வானொலியில் நேரடி அஞ்சல்

ஆடிவேல் நிகழ்ச்சிகள் நேற்று கொழும்பில் ஆரம்பமாகின.

கொழும்பு ஜெயந்திநகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவிலில் தினமும் மாலையில் விசேட ஆடிவேல் ஆன்மிக அருளுரைகள் இடம்பெற்று வருகின்றன.

சென்னை ராணிமேரி கல்லூரி தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி சாரதாநம்பி ஆரூரன் ஆன்மீக அருளுரைகளை தினமும் வழங்கி வருகின்றார்.

நேற்று ஆரம்பமான அருளுரை 12-ம் திகதி வரை தினமும் மாலையில் இடம்பெறும்.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனதமிழ்ச்சேவை இதனை அஞ்சல் செய்யும் (கி)

### ஆசிரியர்களுக்கு லலித் எச்சரிக்கை
## இடமாற்றத்தை ஏற்காவிடில் வீட்டுக்கு அனுப்பப்படுவர்

ஆசிரிய இடமாற்றங்கள் இனி கண்டிப்பாக அமுல் செய்யப்படும்.

இவ்வாறு கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் அதிகமாக வுள்ள பாடசாலைகளில் கடமைபுரிவோர் பற்றாக் குறையுள்ள பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்படுவர். அந்த இடமாற்ற உத்தரவை ஏற்க மறுப்பவர்கள் தங்கள் சம்பளத்தை இழக்கத் தயாராக இருக்க வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (கி)

## தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் உணவுப் பொருட்கள் திருட்டு

யாழ். தாதிகள் பயிற்சிப் பாடசாலை அறைகள் உடைக்கப்பட்டு மாணவர்களின் உடமைகள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப்பயிற்சிப்பாடசாலை விடுதியில் உள்ள உணவுக் களஞ்சியத்தில் முன்னர் போதியளவு உணவுப் பண்டங்கள் சேமிக்கப்பட்டு இருந்தன இவை மாணவர்கள் தமது சொந்தப் பணத்தில் வாங்கியவை.

இவை அனைத்தும் அங்கு தங்கியிருந்த மாணவர்களுக்குத் தெரியாமலேயே எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாம்.

இந்த திருடர்களும் உள் வீட்டுக்காரர்களே எனவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

### வைத்தியசாலை குளிர்சாதனப் பெட்டியில்
## தாதியரின் 'வீட்டுப் பொருட்கள்; மருந்துக்கு அங்கே இடமில்லை!

யாழ். போதனா வைத்தியசாலையில் இன்சுலின் மற்றும் ஊசி மருந்துகள் போன்றன பாதுகாக்கப்படுவதற்கு போதிய குளிர்சாதனப் பெட்டிகள் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையிலும் வைத்தியர்கள், தாதியர்களின் இன்னோரன்ன பொருட்கள், (மாஜரின் போன்றன) வீட்டுப் பாவனை உணவுப் பொருட்கள் பாதுகாக்கப்படுவதற்கு இக் குளிர்சாதனப் பெட்டிகள் பயன்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது எனக் கூறப்படுகிறது.

இக்கட்டான இச் சூழ்நிலையிலுமாவது இதைத் தடுக்கக் கூடாதா எனக் கேட்கிறார்கள் நோயாளிகள். (71-ஸ்ரீகி)

### மட்டு. ஆயர் கோரிக்கை
## உயிர்களைக் காப்பாற்ற
## யுத்த நிறுத்தம் அவசியம்

வடக்கு கிழக்கில் உடனடியாக யுத்தநிறுத்தம் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு மட்டு- திருமலை ஆயர் பேரருட் திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

எவர் எந்த இனமாக விருந்தாலும் மனித உயிர்களுக்கு மதிப்பளிக்கப்படல் வேண்டும். இதற்கு முதலில் யுத்தநிறுத்தம் அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார். (கி)


### தனியார் கல்விநிறுவன ஒன்றியம் யாழ். மாவட்டம்.

நிர்வாகசபைக்கூட்டம்.

இடம்:- ''யூனிவேர்சல்'' கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
காலம்:- 07-08-1990 இன்று (செவ்வாய்) காலை 10 மணி
★ நிர்வாகசபை உறுப்பினர்கள் தவறாது சமுகமளிக்கவும்.

பொதுச்சபைக்கூட்டம்

இடம்;- யா/நல்லூர் ஸ்தான சி. சி. த. க பாடசாலை (யாழ். கல்வித்திணைக்களத்திற்கு அருகாமையில்)
காலம்;- 09-08-1990 (வியாழன்) காலை 10 மணி
★ பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

(செயலாளர்)

08010


## கிளிநொச்சி மாணவருக்கு பெறுபேறுகள் இன்னுமில்லை

கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் தமது க.பொ.த. (சாதாரணப்) பரீட்சை முடிவை இன்று வரையும் பெறவில்லை.

எப்ப முடிவு வரும் என்றே அவர்களுக்குத்தெரியவில்லை. அதிபர், ஆசிரியர்களுக்கும் தெரியவில்லை.

யாழ். மாவட்டத்துக்கு முடிவு கிடைத்து ஒருகிழமை கடந்து விட்டது. ஆனால் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்குரிய க.பொ.த (சா.த) பரீட்சை முடிவுகள் இன்னும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ப. 6கி)

## குவைத்தில் படைவிலகல் ஞாயிறுமுதல் ஆரம்பம்; சிறைபிடிக்கப்பட்ட அமெரிக்கர்கள் விடுதலை

மேற்கு நாடுகள் அரபு நாடுகளின் விடயங்களில் தலையிடக்கூடாது.

இவ்வாறு ஈராக் கேட்டிருக்கிறது. அரபு நாடுகளுக்குள் பல பிரச்சினைகள் இருக்கலாம். அவை அந்தந்த நாடுகள் தங்களுக்குள்ளேயே தீர்க்க வேண்டியவை. இவ்விவகாரங்களில் மேற்கு நாடுகள் தலையிடுவதில் பிரச்சினைகள் தீரப்போவதில்லை எனவும் ஈராக் தெரிவித்துள்ளது.

சவூதியின் மீது தாக்குதல் தொடரும் நோக்கம் கிடையாதெனவும், குவைத்திலிருந்து படைவிலகல் ஞாயிறுக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஈராக்கிய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க குவைத்தில் ஈராக்கிய படைகளால் கைது செய்யப்பட்டிருந்த அமெரிக்கர்களும், பிரிட்டிஷ் பாதுகாப்பு ஆலோசகர்களும் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கின் மீது முழு அளவிலான பொருளாதாரத் தடையைக் கொண்டுவர உலகநாடுகள் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டுமென அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதே வேளை குவைத்தினுள் ஈராக்கிய துருப்புக்கள் குவைத்திய மக்களை சூறையாடுவதாகவும், ஈராக்கிய சார்பு இடைக்கால அரசை ஆதரிக்குமாறு வற்புறுத்துவதாகவும் ஐக்கிய நாடுகள் சபைக்கான குவைத் தூதுவர் குற்றம் சாட்டியுள்ளதோடு குவைத் மக்களை பாதுகாக்குமாறும் கோரியுள்ளார். (கி)

## குவைத் சிறைகளிலிருந்த 125 இலங்கையர் விடுதலை

குவைத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த 125 இலங்கையர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குவைத்தில் நிலை கொண்டுள்ள ஈராக்கிய துருப்புக்கள் இவர்களை சிறைகளிலிருந்து விடுதலை செய்தனர்.

குவைத்தில் வேலை செய்து வந்த இவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் கடந்த சில மாதங்களாக அங்குள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

விடுவிக்கப்பட்டோரில் பெண்களும் அடங்குவர். இவர்களில் அறுவர் கர்ப்பிணிகளாவர். (கி)

## சூட்டினால் பொம்மர் சேதம்

நேற்று முன்தினம் காலை ஏழரைமணியளவில்நகர் பகுதியில் குண்டுவீச்சில் ஈடுபட்ட பொம்மர் விமானமொன்றுவிடுதலைப் புலிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தில் சிக்கியது அப்போது குண்டடிபட்ட இந்த விமானத்தின் பின் இறக்கையில் இருந்து பெரும் தீச்சுவாலை ஒன்று எழுந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

குறிப்பிட்ட விமானம் சிறிது நேரம் நிலைகுலைந்து பறந்து பின்னர் பலாலிப் பக்கமாகச் சென்றது.

இத்தாக்குதல் குறித்து விமானிகள் உரையாடியதும் குறிப்பிட்ட விமானத்தை உடனடியாகத் தளத்திற்கு திரும்புமாறு வேறு ஒரு விமானம் கட்டளையிட்டதும் எப். எம். அலைவரிசையில் செவிமடுக்கக் கூடியதாகவும் இருந்தது. (து)


### யாழ். இந்துவின் பழைய மாணவர்களுக்கு

தற்போதைய சூழ்நிலையில் இடம் பெயர்ந்து வந்துள்ளோருக்கு உதவி செய்வது சம்பந்தமாக ஆராய்வதற்கு எமது கல்லூரியின் பழைய மாணவர்கள் எல்லோரையும் 11-08-90 காலை 9-30 மணிக்கு கல்லூரியில் ஒன்றுகூடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்,

சு. டிவகலாலா
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

08011

# இந்தியக் கடலில் இல.படை தர்பார்

# தடுக்க கலைஞர் கோரிக்கை

இலங்கை கடற்பகுதியினர் இந்தியக் கடல் எல்லைக்குள் பிரவேசித்து தமிழக மீனவர்களைத் தாக்கி வருவதாக தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார். இந்தியக் கடல் பகுதியில் இலங்கை கடற்படையினரின் அத்துமீறல் தாக்குதல்களை உடனடியாகத் தடுக்குமாறும் அவர் மத்திய அமைச்சரைக் கேட்டுள்ளார்.

இதேவேளை இலங்கைக் கடற்படையினர் இந்தியக் கடற் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் பிடித்துச்சென்ற எட்டுத் தமிழக மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

இந்தக் கோரிககை மததிய வெளியுறவு அமைச்சின் மூலமாக இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க இலங்கைக் கடற்படையினரிடமிருந்து தங்களைக் காக்குமாறு கோரி தமிழக மீனவர்கள் ஒருநாள் 'கடல் பகிஷ்கரிப்பை' மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

## 'மத்தியஸ்தம்' தொண்டமான் தயார் ஆனால்...... ஒரு நிபந்தனை!

தற்போதைய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டால் அதற்கு மத்தியஸ்தம் வகிக்க அமைச்சர் தொண்டமான் தயாராக உள்ளாராம்

அமைச்சர் செல்லச்சாமி கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஆனால் சகல தமிழ் அமைப்புக்களும் ஒருமித்து அமைச்சர் தொண்டமானிடம் நம்பிக்கை வைத்து கோரிக்கை விடுத்தால் மட்டுமே இது சாத்தியப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (கி)

## சிறுமி காயம்

நேற்று முன்தினம் கொழும்புத்துறையில் மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலில் அதிர்ச்சிக்குள்ளான 11 வயதுச் சிறுமி ஒருத்தி பேசும் சக்தியை இழந்த நிலையில் மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். (30 கி)

## வவுனியாவில் கொப்பேகடுவ தலைமையில் 'ஒபரேசன் டைகர் ஹன்ட்'

'ஒபரேசன் டைகர் ஹன்ட்' வவுனியாவில் சில தினங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு இவ்வாறு பெயரிடப்பட்டுள்ளதாம். இந்த இராணுவ நடவடிக்கைக்கு வடமாகாண இராணுவப் பொறுப்பாளர் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ நேரடியாகப் பொறுப்பாக இருந்ததாக நேற்று பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (கி)

## 60 அகதிகளுடன் சென்ற இரு படகுகள் கடலில் மறைவு

திருகோணமலை அகதிகளை ஏற்றிக்கொண்டு தமிழகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இரு படகுகள் காணாமல்போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விரு படகுகளிலும் சுமார் அறுபது அகதிகள் பயணம் செய்திருந்தனர்.

இதேவேளை தலைமன்னாரிலிருந்து தமிழகத்தை நோக்கிச் சென்ற படகொன்று கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டதாகவும் அதில் பயணம் செய்தோர் கொல்லப்பட்டதாகவும் நேற்று ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றது. (கி)

## அட்டகாசம்

இராணுவத்தாக்குதல் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்துள்ள பகுதிகளில் திருடர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

அண்மையில் மயிலிட்டியில் மரக்காலை ஒன்றில் திருடர்கள் சிலர் லொறி கொண்டு வந்து அங்கிருந்ததளபாடங்கள் ஏற்றிச்சென்றுள்ளனர். (48கி)

## அம்பாறையில் 18 சடலங்கள்

அம்பாறையில் நேற்று முன் தினம் 18 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கில் முள்ளிக்குளம்' ஒலுவில்லு ஆகிய பகுதிகளிலிருந்து கடத்தப்பட்ட நாற்பது முஸ்லிம்களில் சிலரின் சடலங்களே இவை என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கொழும்பில் தெரிவித்ததாகவும் இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (கி

## போலி ஏஜன்ஸிகளைத் தடுக்க புதிய சட்ட நடவடிக்கை

வெளிநாட்டு தொழில் முகவர் நிலையங்களை இனி தனிப்பட்ட ஒருவரின் பெயரில் பதிவு செய்ய முடியாது.

வெளிநாட்டு தொழில் வாய்ப்பு சம்பந்தமாக இடம்பெற்றுவரும் மோசடிகளை தடுத்து மோசடிசெய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இலகுவாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இனிமேல் வெளிநாட்டு தொழில் முகவர் நிலையங்கள் கொம்பனிகளாகவே பதியப்படும். இத்தகைய கொம்பனிகள் பணிப்பாளர் சபை ஒன்றையும், வங்கிக் கணக்குகளையும் கொண்டிருத்தல் வேண்டும். (கி)

## மானிப்பாயில் மக்கள் வெள்ளம்; எங்கும் ,சோகமயம் ஒரே வரிசையில் வேங்கைளின் உடல்கள்

யாழ். கோட்டை இராணுவ முகாம் தாக்குதலில் வீரமரணம் அடைந்த 28 வேங்கைகளில் 11 பேரின் உடல்கள் நேற்று நண்பகல் முதல் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த வேங்கைகளின் உறவினர்களின் அழுகை ஒலி அங்கு குழுமியிருந்த மக்கள் அனைவரையும் கண்ணீர் மல்கச் செய்தது.

வீரமரணம் அடைந்த வேங்கைகளிற்கு நேரில் அஞ்சலி செலுத்த, மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தார்கள். மானிப்பாய் பகுதி முழுவதும் சோகத்தில் ஆழ்ந்திருந்தது. வீதிகள் யாவும் வாழைகள், தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. மானிப்பாய் பிப்பிலி மயானம்வரை ஒரே மக்கள் கூட்டமாகவே இருந்தது.

குடாநாட்டின் பல பருதிகளிலுமிருந்து மானிப்பாயை நோக்கி மக்கள் படையெடுத்தவண்ணமிருந்தனர்.

பல இடங்களிலுமிருந்து கறுப்புக்கொடிகள் கட்டிய சைக்கிள்களில் இளைஞர்கள், வயோதிபர்கள் மானிப்பாயை நோக்கி ஊர்வலமாகச் சென்றுகொண்டிருந்தனர்.

போராளிகன் சடலங்கள் புலிக்கொடிகளினால் போர்க்கப்பட்டு, மலர் மாலைகளால் சூழப்பட்டிருந்தன.

போராளிகளின் சடலங்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு மக்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தனர். (70, 30 கி)

## சீரில்லா சீனி விலை

சில நாட்களுக்கு முன் திடீரென வீழ்ச்சி அடைந்த சீனியின் விலை இப்போது திடீரென உயர்ந்துள்ளது. கிலோ 40 ரூபாவுக்கு விற்கப்பட்ட சீனி தற்போது 65 ரூபா வரை விற்கப்படுகிறது. வவுனியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையே சீனியின் விலை உயர்வுக்கு காரணம் எனக் கூறப்படுகிறது. (ப- 10 ஸ்ரீகி)

## ஹெலி சுட்டு சிறுவன் பலி

நேற்று முன்தினம் பகல் வீட்டில் நித்திரையாகக் கிடந்த சிறுவன் ஒருவன் ஹெலி கொப்டரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சூட்டினால் மரணமானார்· (சந்திரன் 12) என்ற சிறுவனே இச்சம்பவத்தில் மரணமானவர்.

பூநகரியில் கொள்ளக்குறிச்சி என்னும் இடத்தில் இச்சம்பவம் நிகழ்ந்தது. (ப- 6கி)

## சங்கானையில் ஒருவர் காயம்

நேற்று முன்தினம் ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் செ. தர்மினி (22) என்பவர் காயமடைந்தார். இச்சம்பவம் சங்கானையில் இடம்பெற்றது. அதேவேளை ஒரு வீட்டின் ஓடுகள் சேதமடைந்ததுடன் கால்நடை ஒன்றும் இறந்தது, (70 கி)

## புலிகளின் எச்சரிக்கை

காங்கேசன் இராணுவ முகாமை அண்மித்த காங்கேசன் – கீரிமலை வீதி, ஐய்னார் கோயில், மாம்பிராய வடக்கு பகுதிகளில் பொது மக்களை நடமாட வேண்டாம் என விடுதலைப் புலிகள் எச்சரித்துள்ளார்கள், இப்பகுதிகளில் மிதிவெடிகள் உள்ளன என்ற அறிவித்தல்கள் அங்கு காணப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது (ப. 10-ஸ்ரீகி)

## முதலுதவி மையங்கள்

யாழ்.கல்வித்திணைக்கள முறைசாரக் கல்விப்பிரிவின் முதலுதவிப்பயிற்சி நெறியில் பங்குபற்றிய வடமராட்சி மாணவர்கள் முதலுவிப் பயிற்சி மையங்கள் நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளன.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மகளிர் பிரிவு, நாவலர் பாடசாலை நவிண்டில், விக்னேஸ்வரா கல்லூரி கரவெட்டி, வடஇந்து மகளிர் பருத்தித்துறை. ஞானகாரியர் கலலூரி கரவெட்டி அம்பாள் பாடசாலை அல்வாய் ஆகிய பாடசாலைகளில் இவ் முதலுவிப்பயிற்சி மையங்கள் இயங்குகின்றன.

## ரொக்கட் தாக்கி வீடுகள் சேதம்

நேற்று முன்தினமிரவு ஹெலி நடாத்திய ரொக்கட் மோட்டார்த் தாக்குதலில் கோப்பாய் தெற்குப் பழைய வீதி கள்ளியவத்தை ஒழுங்கையிலுள்ள வீடொன்று பலத்த சேதமடைந்தது.

இரவு 9. 15 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மரியம்மா என்பவரது வீடே சேதமடைந்தது. இதைத் தொடர்ந்து ஹெலி அப்பகுதிகளில் பல மணி நேரம் துப்பாக்கி வேட்டுக்களைத்தீர்த்தது. இதனால் அப்பகுதியில் இருந்த பல வீடுகள் சேதமடைந்தன. (3கி)

## இடம்பெயர்வோர் அதிகரிப்பு

கடந்த சில நாட்களாக வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு இடம்பெயர்ந்து வரும் அகதிகள் தொகை அதிகரித்துள்ளது.

ஆனையிறவு இராணுவ முகாமை மிக அண்டியுள்ள ஆனையிறவு, உப்பளம், தட்டுவன் கொட்டி, இயக்கச்சி, சங்கத்தார் வயல், கோயில் வயல் கிராமங்களில் இருந்து அறுநூற்று (600) க்கு மேற்பட்ட குடும்டங்கள் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, போக்கறப்பு அகதி முகாம்களில் தங்கியுள்ளனர். (18கி)

## நிருவாக சபை

பாடசாலைகள் தோறும் பாடசாலை நிருவாக சபைகள் புதிதாக அமைக்கப்படவுள்ளன.

இந்தபாடசாலை நிருவாக சபைகள் கல்வி அமைச்சின் அங்கீகாரத்துடன் செயற்படும்.

பாடசாலை நிருவாகம் ,நிதி, பாடசாலை அபிவிருத்தி. ஆசிரியபற்றாக்குறை போன்ற விடயங்களில் பாடசாலை நிருவாக சபைகள் கூடுதல் அதிகாரங்களைக் கொண்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது (கி)

## பங்கீட்டு பொருள் வழங்க பணிப்பு

உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கு பங்கீட்டுப் பொருட்கள் வழங்கப்படல் வேண்டுமென யாழ். மாவட்டக் கூட்டுறவு ஆணையாளர் பணித்துள்ளார்.

நல்லூர் ப. நோ. கூ. சங்கம், அதன் உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்குப் பங்கீட்டுப் பொருள் வழங்கலை நிறுத்தியமை பற்றிய செய்தி முரசொலியில் வெளியானதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (கி)

## ஹிரோஷிமாவில் நேற்று ...

யப்பானின் ஹிரோஷிமா நகரம் நேற்று ஒரு நிமிடம் செயலிழந்தது

முதலாவது அணுகுண்டு போடப்பட்டதன் நினைவு தினம் நேற்றாகும். இதனை முன்னிட்டே அங்கு நினைவு பிரார்த்தனைகளுடன், ஒரு நிமிட நேர மௌனமும் இடம்பெற்றது.

1945-ல் அமெரிக்கா ஹிரோஷிமா மீது குண்டு வீசியதில் ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் பேர் மரணமாகியிருந்தனர். (கி)

## தாபரிப்பு நிதி வழங்கப்படும்

வன்செயலால் தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாசத்தால் மாதாந்தம் வழங்கப்படும் தாபரிப்பு நிதி, இம் மாதமும் 10-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரையும் நல்லூரில் அமைந்துள்ள யாழ். மாநகரசபையின் பணிமனையில் வழங்கப்படவிருக்றது. (47கி)

## பங்குக் குரு நிதியுதவி

நேற்று முன்தினம் காலை ாஷையூரில் இடம்பெற்ற அகதிமுகாம் குண்டு வீச்சுத் தாக்குதலில் பலியாகியவர்களுக்கு பாஷையூர் அந்தோனியார் ஆலயக்குரு நிதியுதவிகளை வழங்கியுள்ளார்.

குண்டுத்தாக்குதலுக்கு இலக்கான இரு அகதி முகாம்களையும் இவர்களே பராமரித்து வருகின்றனர்.

இத்தாக்குதலில் காயமடைந்தோருக்கான அவசர வைத்திய உதவிகளை பாஷையூர் திருச்சிலுவை சுகநல நிலையம் வழங்கியது. (0368கி)

# துர்க்கை ஆலயத்தில் தஞ்சமடைந்த

# அகதிகள் இருவர்பலி; பலர் காயம்

நேற்று முன்தினம் நள்ளிரவு பலாலியில் இருந்து ஏவப்பட்ட பல ஆட்டிலறி ஷெல்கள் தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான சூழலில் விழுந்து பல அனர்த்தங்களை ஏற்படுத்தின.

துர்க்கா தேவஸ்தானத்தின் முன்பக்கத்தில் அமைந்துள்ள தற்காலிக முகாம் ஒன்றில் விழுந்த ஷெல் ஒன்று இ.சரவணமுத்து (35 வயது) என்பவரையும், திருமதி வே. நேசம்மா (53 வயது) என்பவரையும் ஸ்தலத்திலேயே பலிகொண்டது. மற்றும் 15 பேருக்கு காயங்களும் ஏற்பட்டன.

ஆலயத்திற்கு முன்பக்கத்தே அமைந்துள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் 'ஷெல்' ஒன்று விழுந்து ஒருவருக்குப் படுகாயத்தை ஏற்படுத்தியது.

தெல்லிப்பழை கூட்டுறவு ஆஸ்பத்திரிக்கு அருகே உள்ள அண்ணமார் கோயிலில் விழுந்த ''ஷெல்'' 4 வயதுச் சிறுவன் ஒருவனைப் பலிகொண்டது.

துர்க்கா தேவஸ்தானத்திற்கும் அதனைச் சூழ உள்ள மடங்களுக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என ஆலயப்பரிபாலகர்கள் தெரிவித்தார்கள்.

சுமார் 25 பேர் காயங்களுக்கு உள்ளானார்கள். அவர்களை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கச் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் மற்றும் மக்களும் பெரிதும் உதவினார்கள். (ப-10-ஸ்ரீ)

## உட்குமுறல் பாகிஸ்தானில் வெடித்தது, ஸ்திரத்தளர்வு

பாகிஸ்தானில் அரசியல் நெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதாக நேற்றிரவு கிடைந்த தகவல்கள் தெரிவித்தன,

அந்நாட்டின் பாராளுமன்றம் இதன் எதிரொலியாகக் கலைக்கப்பட்டதாகவும் கூட தகவல் வெளியானது. ஸ்ரீ

## கைகொடுக்க முனைந்தோர் கைது; தமிழகத்தகவல் இது

ஸ்ரீலங்கா அரசின் கொடூரம் தாங்க முடியாமல் அவதியுற்றுத் தமிழகம் நோக்கி வரும் அகதிகளுக்கு உதவ முயலும் தமிழக மீனவர் சமூகத்தினரை அந்நாட்டின் கடற்படை துன்பப் படுத்தி வருவதாக நேற்றிரவு சென்னை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடலில் மீன் பிடிக்கச் சென்றவேளை ராமேஸ்வரம் மீனவர் எண்மர் வழியில் அல்லலுற்றுவந்த ஈழ அகதிகளைத் தம் படகுகளில் காப்பாற்றி தமிழகம் கொண்டு வந்து உதவ முயன்றவேளை ஸ்ரீலங்காக் கடற்படையினர் அவர்களைக் கைதுசெய்து கூட்டிச் சென்றுள்ளதாகவும் நேற்று மாலை தகவல் வெளியானது. (ஸ்ரீ)

## கோப்பாயிலும் கோரப்பார்வை

கடந்த சில நாட்களாகக் கோப்பாய்ப் பகுதியில் பரவலாகக் ஹெலியின் தாக்குதல் தொடர்ந்த வண்ணமுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில் ஹெலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லினால் இரவு பூராகவும் மக்கள் பதற்றத்துடன் காணப்பட்டனர்.

பல இடங்களிலும் வெடித்த துப்பாக்கி ரவைகள் சிதறிக் காணப்பட்டன.

இக்குண்டினால் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றும் சிறிது சேதமுற்றது. தெய்வாதீனமாக இப்பகுதியில் உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை. (23-ஸ்ரீ)

ஸ்ரீலங்கா கடற்படையின்

## தமிழக மீனவர் மீதான தாக்குதல் நீடிக்கிறது

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் சிலரைக் கச்சதீவுப் பகுதியில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படையினர் நையப்புடைத்ததுடன் அவர்களிடமிருந்த பணத்தையும், மீனையும் அபகரித்துக்கொண்டதாகவும் நேற்று அறிவிக்கப்பட்டது.

இதுபற்றிச் சென்னை வட்டாரங்கள் தகவல் தருகையில் ''இம்மீனவர்களைத் தடிகொண்டு தாக்கியதாகவும் இவர்களில் இருவர் படுகாயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளதாகவும்'' மேலும் தெரிவித்தன. ஸ்ரீ

### புலிகளின்...

குதலை மேற்கொண்டதாகவும் இருதாக்குதலிலும் இராணுவத்தினர் தரப்பில் இழப்பு ஏற்பட்ட போதிலும் சேதவிபரங்கள்பெற முடியவில்லை எனவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (03-ஸ்ரீ)

### வீரமரியாதை..

ரியில் இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தைத் தொடர்ந்து வீரர்களின் பூதவுடல்கள் அடங்கிய பேழைகள் வாத்தியக் குழுவினர், போராளிகள், பெருந்தொகையான மக்கள் சகிதம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பினர் மலர் வளையங்களைத் தாங்கிச் சென்றனர்.

ஊர்வலத்தின் இறுதியில் விடுதலைப் புலிகளின் இராணுவ மரியாதையுடன் வீரர்களின் உடல்கள் தகனம் செய்யப்பட்டன. (3-ஸ்ரீ)

### யாழ் நகரில்..

பயிற்சி நிலையம் உட்பட ஐந்து கடைகளும் பல வீடுகளும் சேதமுற்றன.

முட்டாஸ் கடைச் சந்தியில் மீண்டும் வீசப்பட்ட குண்டினால் பதினைந்து கடைகள் முற்றாகத்தரைமட்டமாகியதுடன் ஐம்பது கடைகள் சேதமடைந்தள. கே. கே. எஸ். வீதிதாமோதரவிலாஸ் கடையருகில் வெடித்த ஒரு குண்டினால் பத்துக்கும் மேற்பட்ட கடைகள் சேதமடைந்தன.

ஆனைப்பந்தி அருகில் வீசப்பட்ட மற்றொரு குண்டினால் காராளசிங்கம் என்பவரது வீடும் சுற்றியுள்ள வீடுகளும் சேதமடைந்தன.

மற்றும் பரவலாக ஹெலியிலிருந்து வீசப்பட்ட ரொக்கட் மோட்டர்களினாலும் பல வீடுகள் சேதமடைந்தன. நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலருகிலும் ஹெலியினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. குருநகர்ப்பகுதியிலும் பல வீடுகள் சேதமடைந்தன. (03-68-ஸ்ரீ

## சிபார்சு இன்றேல் நிலை சிரமம்தான் எனப் புகார்

அண்மைக்கால வன்செயல்களால் சொந்த மாவட்டங்களை விட்டு வெளியேறி யாழ் மாவட்டத்தில் பல இடங்களிலும் பரவலாக அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள அரசாங்க ஊழியர்கள் பலர் சம்பளம் பெறமுடியாமல் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும், தமது சம்பள முற்பணமாக சிறு தொகைப் பணத்தைப் பெறுவதற்கு பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் யாழ். செயலக வட்டாரத்திலிருந்து அறியப்படுகிறது.

இடம் பெயர்ந்த உயர் அதிகாரிகள் இலகுவாக மேலதிகாரிகளது உதவியுடன் தமது முற்பணங்களை பெற்றுவருவதாகவும் ஆனால் அகதிகளாகவிருக்கும் அரச ஊழியர்கள் குறித்த முற்பணம் பெறுவதில் பலசிரமங்களை எதிர்நோக்குவதாகவும், அதிகாரிகளின் ஆதரவின்றி சிபார்சின்றி கஷ்டமுறுவதாகவும் யாழ். செயலகத்துக்கு முன் திரண்டிருக்கும் ஊழியர்கள் மூலம் தெரியவந்துள்ளது. (33-ஸ்ரீ)

முஸ்லிம் முக்கியஸ்தர் சாடல்

## சிங்களவர் நலனிற் தான் அரசுக்கு அக்கறை

''தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஆயுதப்படையினருக்கும் இடையே தற்போது நிகழ்ந்து வரும் மோதல்களில் அரசு சிங்கள மக்களின் நலனையே பெரிதும் கவனித்து வருகிறது'' என்று முஸ்லிம் சமூக முக்கியஸ்தர் ஜனாப் அஷ்ரப் குற்றம் சுமத்தியுள்ளதாக நேற்றுமாலை இந்திய வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் தெரிவித்தன.

''முஸ்லிம்கள் நலன் பேணுவதில் அரசு அஜாக்கிரதையாக உள்ளது'' என்று அவர் சொன்னதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ)

### முகிலைக்...

மக்கள் பதைபதைத்து அவஸ்தைப்பட்டு நின்றதனையும் அவதானிக்க முடிந்தது. ஸ்ரீ

### பாகிஸ்தான்...

கொண்டை வெட்டுவான் பகுதியில் பாகிஸ்தானியர் ஸ்ரீலங்கா இராணுவத்திற்குப் பயிற்சியளித்து வருவதாகவும் விடுதலைப் புலிகள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இந்நிலைப்பாடானது தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் அந்நிய சக்தி ஊடுருவல் ஸ்ரீலங்கா அரசின் செயல் முறையால் ஏற்பட வழியுண்டு, எனக்கருதப்பட இடமுண்டு என அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ஸ்ரீ)

### கொக்குவில்...

ஏற்பட்டது.

இங்கு அநேகமான பொதுமக்கள் நின்றபோதும் அருகிலுள்ள பதுங்கு குழியினால் எதுவித காயத்துக்குமுள்ளாமல்தப்பித்துக் கொண்டார்கள். (ஸ்ரீ)

### ஸ்ரீலங்கா...

கண்டவாறு சொன்னார்.

''இது விடயத்தில் தமிழகம் உஷார் நிலையில் இருக்க வேண்டியுள்ளது'' என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இந்தியப்பிரதமர் தெரிவித்துள்ளதான இக்கருத்து ஈழத்தமிழர் விடயத்தில் இந்திய அரசின் நிலைப்பாடு மாற்றமடையுமா? என ஊகிக்கப் படுவதாகக்கூறப்படுகிறது. (ஸ்ரீ

## அகதிகள் இடம் பெயர்வு

நேற்று முன் தினம் காலை பாஷையூர் அகதிமுகாம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலையடுத்து அங்கு தங்கியிருந்த பல அகதிக் குடும்பங்கள் தற்காலிகமாக இடம் பெயர்ந்துள்ளனர்.

புனித அந்தோனியார் மகளிர் பாடசாலையில் உள்ள அகதிகள் சிலர் பாதுகாப்புக் காரணமாக கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலத்தில் தங்கியுள்ளனர். மற்றையோர் இடம் பெயர்ந்துவிட்டனர். (03-69-கி)

### கோட்டை...

விமானப் படை உயரதிகாரி குணவர்த்தனா குறிப்பிட்டதாக ஏஜென்சி செய்திகள் நேற்றுத்தெரிவித்தன.

இப்பகுதியில் ஆறு இடங்களில் புலிகள் விமான எதிர்ப்பு ஆயுதங்களை நிறுவி விமானங்களைத் தாக்கி வருவதாகவும் தற்கொலைப்படைகளை கோட்டையைச் சூழ நிறுத்தி வைத்திருப்பதாகவும் அவ்வுயர் அதிகாரி குறிப்பிட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

### சிப்பாயின்...

சேதம் ஏற்பட்ட போதிலும் சேதவிபரங்களைப்பெறமுடியவில்லை என விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபகுதியில் பொறிவெடி ஒன்று வெடித்ததில் சிப்பாய் ஒருவரின் கால் துண்டிக்கப்பட்டதாகவும் இதையடுத்து இராணுவத்தினர் அருகிலிருந்த வீடுகளுக்குத் தீயிட்டு சென்றதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (3-ஸ்ரீ)

## ஒற்றைக்காலுடன் ஓர் ஊர்வலம்

நேற்று முன்தினம் சுதுமலை இளைஞர்களால் பிரேமதாஸ ரஞ்சன் விஜயரத்தின ஆகியோரின் கொடும்பாவிகள் பிரேத வண்டியில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. கொடும்பாவிகளுடன் கொப்பேகடுவ ஒரு கால் இழந்த நிலையில் கட்டப்பட்டிருந்ததையும்காணக்கூடியதாக இருந்தது.

மேள வாத்தியத்துடன் சுதுமலையில் ஊர்வலம் ஆரம்பமாகி உடுவில், மருதனாமடம்இணுவில்பாலாவோடை வழியாக மானிப்பாய் சந்தியை அடைந்து அங்கு கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

ஊர்வலத்தில் ஆண்கள் சந்திக்குச் சந்தி ஒப்பாரி வைத்து அழுதது சிறப்பம்சயாக இருந்தது. இதில் சுவைமான அம்சம் கொப்பேகடுவா பால் வேடம் தரித்தவர் உண்மையில் ஒரு கால் ஊனமுற்ற ஓர் இளைஞர் ஆவார். ப—ஸ்ரீ

## ப, நோ. கூ, ச இற்கு மாற்ற ஆர்வம்

உணவு முத்திரைகளுக்கு பொருட்களை விநியோகிக்கும் உத்தரவு பெற்ற வியாபாரிகள் சிலர் உணவு முத்திரைகளில் செய்யும் மோசடிகளை அடுத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தமது உணவு முத்திரைகளை மாற்றுவதற்கு பொது மக்கள் முயற்சி எடுத்து வருகின்றனர்.

உத்தரவு பெற்ற யாவிபாரிகள் சில பொருட்களை விலை கூட்டி விற்பதாகவும் விற்கும் பொருட்களுக்கான பற்றுச்சீட்டுக்கள் வழங்குவதில்லை எனவும் உணவு முத்திரைக்கான புள்ளிகளை முன் கூட்டியே வெட்டி எடுத்துவிட்டு இந்த முத்திரைகளுக்கான பங்கீட்டுப் பொருட்களை முறைப்படி வழங்குவதில்லை எனவும் பொதுமக்கள் புகார் தெரிவித்து வருகின்றனர்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள உத்தரவு பெற்ற வியாபாரி ஒருவர் வெட்டி எடுத்த உணவு முத்திரைகளுக்கே பங்கீட்டுப் பொருட்கள் வழங்கவில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்காரணங்களாலேயே கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளுக்கு தமது உணவு முத்திரைகளை மாற்றுவதற்கு முயற்சி எடுத்து வருகின்றனர். 33

## விசேட பரீட்சைக்கு ஏற்பாடு

க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற முடியாதுள்ள பரீட்சார்த்திகளுக்காக விசேட பரீட்சை ஒன்று நடத்தப்படுமென அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இப்பரீட்சை வடக்கு கிழக்கு நிலைமை சீரானதும் நடத்தப்படுமென ஜனாதிபதி செயலகம் அறிவித்தது. (கி)

### துணுக்காயிலும்...

கள் சேதமடைந்தன.

இத்தாக்குதலில் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கியிருந்ததால் மக்கள் உயிர் இழப்புத்தவிர்க்கப்பட்டது. 03-ஸ்ரீ

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மி பில்டிங்கில் உள்ளஅச்சகத்தில் 07-08-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது,